www.Padasalai.Net www.Trb Tnpsc.Com

# முதல் திருப்புதல் தேர்வு - 2025

## பத்தாம் வகுப்பு

பதிவு எண் :

## தமிழ்

நேரம் : 3.00 மணி | பகுதி-I (மதிப்பெண்கள் :15) | மதிப்பெண்கள் : 100

i) அனைத்து வினாக்களுக்கும் விடையளிக்கவும். 15 x 1 = 15

ii) கொடுக்கப்பட்ட மாற்று விடைகளில் மிகவும் ஏற்புடைய விடையைத் தேர்ந்தெடுத்துக் குறியீட்டுடன் விடையினையும் சேர்த்து எழுதவும்.

1. 'விருந்தினரை பேணுவதற்குத் தன் கருங்கோட்டுச் சீறியாழைப் பணயம் வைத்து விருந்தளித்தான்' என்கிறது புறநானூறு, இச்செய்தி உணர்த்தும் விருந்து போற்றும் நிலை
   அ) நிலத்திற்கேற்ற விருந்து ஆ) இன்மையிலும் விருந்து
   இ) அல்லிலும் விருந்து ஈ) உற்றாரின் விருந்து
2. காலக்கணிதம் கவிதையில் இடம்பெற்ற தொடர் ______
   அ) இகழ்ந்தால் என்மனம் இறந்துவிடாது ஆ) என்மனம் இகழ்ந்தால் இறந்துவிடாது
   இ) இகழ்ந்தால் இறந்து விடாது என்மனம் ஈ) என்மனம் இறந்துவிடாது இகழ்ந்தால்
3. 'இங்கு நகரப் பேருந்து நிற்குமா?' என்று வழிப்போக்கர் கேட்பது ______ வினா.
   'அதோ அங்கு நிற்கும்' என்று மற்றொருவர் கூறியது ______ விடை
   அ) ஐய வினா, வினா எதிர் வினாதல் ஆ) அறியா வினா, மறை விடை
   இ) அறியா வினா, சுட்டு விடை ஈ) கொளல் வினா, இனமொழி விடை
4. "விந்தை நெடுநிலைப்பும் வேறார் புகழுரையும்" இத்தொடரில் 'வேறார்' என்ற சொல் குறிப்பது
   அ) வேற்று மொழியார் ஆ) வேண்டியவர் இ) வேறு ஒருவர் ஈ) வெற்றியாளர்
5. கோசல நாட்டில் கொடை இல்லாத காரணம் என்ன?
   அ) நல்ல உள்ளம் உடையவர்கள் இல்லாததால் ஆ) ஊரில் விளைச்சல் இல்லாததால்
   இ) அரசன் கொடுங்கோல் ஆட்சி புரிவதால் ஈ) அங்கு வறுமை இல்லாததால்
6. கொடுக்கப்பட்ட அனைத்துச் சொற்களும் அமைந்த பொருத்தமான தொடரைத் தேர்க.
   *(மலை, மழை, மேகம், ஆறு, ஏரி, குளம்)*
   அ) மலைமீது மழை பெய்து ஆற்று வெள்ளம் ஊரின் வழியே பெருக்கெடுத்து ஓடியது.
   ஆ) கருத்த மேகம் மலைமீது மழையைப் பொழிய ஆறு, ஏரி, குளம், அனைத்தும் நீரால் நிரம்பி
   இ) திரண்ட மேகங்கள் மலையில் மாரியாகி ஆறு, ஏரி, குளங்களில் நிறைந்தன.
   ஈ) மலைமீது மழைபொழிய ஏரி குளங்கள் நிறைந்து பின் கடலில் சென்று கலந்தது.
7. வினைமுற்றுத் தொடரைத் தேர்க
   அ) பாடிய கவிஞர் ஆ) பாடினார் கவிஞர் இ) கவிஞர் பாடினார் ஈ) பாடும் கவிஞர்
8. வாய்மையே மழைநீராகி இத்தொடரில் வெளிப்படும் அணி
   அ) உவமை ஆ) தற்குறிப்பேற்றம் இ) உருவகம் ஈ) தீவகம்
9. பாரத ஸ்டேட் வங்கியின் உரையாடு மென்பொருள் எது?
   அ) துலா ஆ) சீலா இ) குலா ஈ) இலா
10. இருபாலருக்கும் பொதுவான பிள்ளைத்தமிழ் பருவத்தைத் தேர்ந்தெடுக்க
    அ) சிற்றில் ஆ) சிறுதேர் இ) சப்பாணி ஈ) அம்மானை
11. இருநாட்டு அரசர்களும் தும்பைப் பூவைச் சூடிப் போரிடுவதன் காரணம்
    அ) நாட்டைக் கைப்பற்றல் ஆ) ஆநிரை கவர்தல்
    இ) வலிமையை நிலைநாட்டல் ஈ) கோட்டையை முற்றுகையிடல்

Kindly Send Me Your Key Answer to Our email id - Padasalai.net@gmail.com

www.Padasalai.Net www.Trb Tnpsc.Com



பாடலைப் படித்து பின்வரும் வினாக்களுக்கு (12, 13, 14, 15) விடை தருக.

"காற்றே, வா
மகரந்தத் தூளைச் சுமந்து கொண்டு,
மனத்தை மயலுறுத்து கின்ற இனிய வாசனையுடன்வா
இலைகளின் மீதும், நீரலைகளின் மீதும் உராய்ந்து,
மிகுந்த ப்ராண - ரஸத்தை எங்களுக்குக் கொண்டு கொடு"

12. 'மயலுறுத்து' என்பதன் பொருள்:
அ) விளங்கச் செய் ஆ) மயங்கச் செய் இ) அடங்கச் செய் ஈ) சீராக

13. பின்வருவனவற்றுள் பிராண ரஸம் எது?
அ) ஆக்சிஜன் ஆ) கார்பன் - டை - ஆக்ஸைடு
இ) ஹைட்ரோ கார்பன் ஈ) கந்தக - டை - ஆக்ஸைடு

14. 'காற்றே வா' - இலக்கணக் குறிப்பு தருக.
அ) வினையெச்சம் ஆ) விளித்தொடர்
இ) பெயரெச்சத்தொடர் ஈ) வினைத்தொகை

15. நீரலைகளின் - பிரித்தெழுதுக.
அ) நீர் + அலைகளின் ஆ) நீரின் + அலைகளின்
இ) நீரலை + களின் ஈ) நீர + அலைகளின்

## பகுதி - II (மதிப்பெண்கள் : 18)

### பிரிவு - 1

**குறிப்பு: எவையேனும் நான்கு வினாக்களுக்கு மட்டும் விடையளிக்கவும்.**
**வினா எண் 21-க்கு கட்டாயமாக விடையளிக்கவும்.** 4 x 2 = 8

16. நான் எழுதுவதற்கு ஒரு தூண்டுதலும் அதற்குரிய காரணமும் உண்டு - இத்தொடரை இரு தொடர்களாக்குக.

17. விடைகளுக்கேற்ற வினாக்கள் அமைக்கவும்:
அ) ஒரு நாட்டு வளத்திற்குத் தக்கபடியே, அந்நாட்டு மக்களின் அறிவொழுக்கங்களும் அமைந்திருக்கும்.
ஆ) ஆந்திர மாநிலம் பிரியும்போது சென்னைதான் அதன் தலைநகராக இருக்கவேண்டும் என்று ஆந்திரத் தலைவர்கள் கருதினர்.

18. மெய்க்கீர்த்தி பாடப்படுவதன் நோக்கம் யாது?

19. வறுமையின் காரணமாக உதவி கேட்டு வருபவரின் தன்மானத்தை எள்ளிநகையாடுவது குறித்துக்குறளின் கருத்து என்ன?

20. பாசவர், வாசவர், பல்நிண விலைஞர், உமணர் - சிலப்பதிகாரம் காட்டும் இவ்வணிகர்கள் யாவர்?

21. 'பல்லார்' எனத் தொடங்கும் திருக்குறளை எழுதுக.

### பிரிவு - 2

**குறிப்பு: எவையேனும் ஐந்து வினாக்களுக்கு மட்டும் விடையளிக்கவும்.** 5 x 2 = 10

22. சொல்லைக் கண்டுபிடித்துப் புதிரை விடுவிக்க
அ) பழமைக்கு எதிரானது. எழுதுகோலில் பயன்படும்
ஆ) ஒரெழுத்தில் சோலை. இரண்டெழுத்தில் வனம்.

23. தேன், நூல், பை, மலர், வா இத்தனிமொழிகளுடன் சொற்களைச் சேர்த்துத் தொடர்மொழியாக்குக.

Kindly Send Me Your Key Answer to Our email id - Padasalai.net@gmail.com

www.Padasalai.Net www.Trb Tnpsc.Com



24. புறத்திணைகளுள் எதிரெதிர்த் திணைகளை அட்டவணைப்படுத்துக.
25. எதிர்மறையாக மாற்றுக.
அ) மீளாத்துயர் ஆ) புயலுக்குப் பின்
26. கலைச்சொற்கள் தருக.
அ) Vowel ஆ) Discussion
27. பகுபத உறுப்பிலக்கணம் தருக: ஒலித்து
28. கலவைச் சொற்றொடராக மாற்றுக:
கூத்துக் கலைஞர் பாடத் தொடங்கினார் கூடியிருந்த மக்கள் அமைதியாயினர்.

## பகுதி - III (மதிப்பெண்கள் : 18)

### பிரிவு - 1 2 x 3 = 6

குறிப்பு: எவையேனும் இரண்டு வினாக்களுக்கு மட்டும் சுருக்கமாக விடையளிக்கவும்.

29. இன்றைய அறிவியல் கண்டுபிடிப்புகள் மனிதனை மேம்படுத்துகின்றனவா என்ற சிந்தனையை முன்வைத்து எழுதுக.
30. பின்வரும் பத்தியைப் படித்து வினாக்களுக்கு விடையளிக்க.
இரவீந்திரநாத் தாகூர் வங்கமொழியில் எழுதிய கவிதைத் தொகுப்பான கீதாஞ்சலியை ஆங்கிலத்தில் அவரே மொழிபெயர்த்த பிறகு தான் அவருக்கு நோபல் பரிசு கிடைத்தது. ஒரு நாடு எவ்வளவு மின்னாற்றலைப் பயன்படுத்துகிறது என்பதைக் கொண்டு அதன் தொழில்வளர்ச்சியை மதிப்பிடுவார்கள். அது போல ஒரு நாட்டின் மொழி பெயர்ப்பு நூல்களின் எண்ணிக்கையைக் கொண்டு அந்நாட்டின் பண்பாட்டையும் அறிவையும் மதிப்பிடுவார்கள் மொழி பெயர்ப்பு இல்லாவிடில் சில படைப்பாளிகளும் கூட உருவாகியிருக்க முடியாது.
1. ஒரு நாட்டின் பண்பாட்டையும், அறிவையும் எவ்வாறு மதிப்பிடப்படுவார்கள்?
2. கீதாஞ்சலி நூலை ஆங்கிலத்தில் மொழிப்பெயர்த்தவர் யார்?
3. ஒரு நாட்டின் தொழில் வளர்ச்சி எவ்வாறு மதிப்பிடப்படுகிறது?
31. தலையைக் கொடுத்தேனும் தலைநகரைக் காப்போம் - இடஞ்சுட்டி பொருள் விளக்கம் தருக.

### பிரிவு - 2

குறிப்பு: எவையேனும் இரண்டு வினாக்களுக்கு மட்டும் விடையளிக்கவும்.
வினா எண் 34 - க்கு கட்டாயமாக விடையளிக்க வேண்டும். 2 x 3 = 6

32. தமிழழகனார் தமிழையும் கடலையும் இரட்டுறமொழியும் பங்கினை விளக்குக.
33. சிறந்த அமைச்சருக்குக் கூறிய இலக்கணங்கள் நமக்கும் பொருந்துவதைத் திருக்குறள் வழி விளக்குக.
34. அடிபிறழாமல் எழுதுக.
அ) "அருளை -------" எனத் தொடங்கும் காசிக்காண்டப் பாடலை எழுதுக *(அல்லது)*
ஆ) "தூசும் துகிரும் -------" எனத் தொடங்கும் சிலப்பதிகாரப் பாடலை அடிமாறாமல் எழுதுக.

### பிரிவு - 3 2 x 3 = 6

குறிப்பு: எவையேனும் இரண்டு வினாக்களுக்கு மட்டும் சுருக்கமாக விடையளிக்கவும்.

35. வினா வகைகளை எழுதுக. ஏதேனும் இரு வகை வினாக்களைச் சான்றுடன் விளக்குக.
36. கவிஞர் தாம் கூறுவிரும்பும் கருத்திற்கு ஏற்றவாறு தற்குறிப்பேற்ற அணி அமைவதை எடுத்துக்காட்டுக.
37. சொல்லைப் பயன்படுவர் சான்றோர் கரும்புபோல
கொல்லப் பயன்படும் கீழ் - இக்குறட்பாவினை அலகிட்டு வாய்பாடு தருக.

## பகுதி - IV (மதிப்பெண்கள் : 25)

குறிப்பு: அனைத்து வினாக்களுக்கும் விடையளிக்கவும். 5 x 5 = 25

38. அ) மனோன்மணீயம் சுந்தரனாரின் தமிழ்த்தாய் வாழ்த்துப் பாடலையும் பெருஞ்சித்திரனாரின் தமிழ் வாழ்த்தையும் ஒப்பிட்டு மேடைப் பேச்சு ஒன்றை உருவாக்குக. *(அல்லது)*
ஆ) முல்லைப்பாட்டு காட்சிகளிலிருந்து சங்ககால மக்களின் வாழ்க்கைச் சூழலாக நீங்கள் உணர்ந்தவற்றை எழுதுக.

Kindly Send Me Your Key Answer to Our email id - Padasalai.net@gmail.com

www.Padasalai.Net www.Trb Tnpsc.Com




39. அ) நாளிதழ் ஒன்றின் பொங்கல் மலரில் உழவுத் தொழிலுக்கு வந்தனை செய்வோம் என்ற உங்கள் கட்டுரையை வெளியிட வேண்டி அந்நாளிதழ் ஆசிரியருக்குக் கடிதம் எழுதுக.

*(அல்லது)*

ஆ) பல்பொருள் அங்காடி ஒன்றில் வாங்கிய உணவுப்பொருள் நாள்பட்டதாக இருப்பது குறித்து உரிய சான்றுகளுடன் உணவுப் பாதுகாப்பு ஆணையருக்கு முறையீட்டுக் கடிதம் எழுதுக.

40. காட்சியைக்கண்டு கவினுற எழுதுக.



41. கதவு எண். 25, திலகர் தெரு, மதுரை வடக்கு - 2 என்ற முகவரியில் வசிக்கும் நலங்கிள்ளியின் மகள் வேல்விழி அதே பகுதியில் உள்ள இருசக்கர வாகன விற்பனையகத்தில் தகவல் உள்ளீட்டாளர் பணிக்கு விண்ணப்பிக்க விரும்புகிறார். தேர்வர் தன்னை வேல்விழியாகக் கருதி, தன் விவரப் பட்டியலைக் கொடுக்கப்பட்டுள்ள விவரங்களைக் கொண்டு நிரப்புக.

42. அ) தொலைக்காட்சி நிகழ்வுகளையே பார்த்துக்கொண்டிருக்கும் தம்பி: திறன்பேசியிலேயே விளையாடிக்கொண்டிருக்கும் தங்கை காணொலி விளையாட்டுகளில் மூழ்கியிருக்கும் தோழன்: எப்போதும் சமூக ஊடகங்களில் இயங்கியபடி இருக்கும் தோழி இவர்கள் எந்நேரமும் நடப்புலகில் இருக்காமல் கற்பனை உலகில் மிதப்பவர்களாக இருக்கிறார்கள்! இவர்களை நெறிப்படுத்தி நடைமுறை உலகில் செயல்பட வைக்க நீங்கள் செய்யும் முயற்சிகளைப் பட்டியல் இடுக. *(அல்லது)*

ஆ) **மொழிபெயர்க்க:**

Kalaignar karunanidhi is known for his contributions to Tamil literature. His contributions cover a wide range: poems, letters, screenplays, novels, biographies, historical novels, stage - plays, dialogues and movie songs. He has written Kuralovlam for Thirukural, Tholkaappiya Poonga, Poombukar, as well as many poems, essays and books. A part from literature, Karunanidhi has also contributed to the Tamil language through art and architecture. Like the Kuraloviyam, in which Kalaignar wrote about Thirukkural, through the construction of Valluvar Kottam he gave an architectural presence to Thiruvalluvar, in Chennai. At Kanyakumari, Karunanidhi constructed a 133 - foot - high statue of Thiruvalluvar in honour of the scholar.

## பகுதி - V (மதிப்பெண்கள் : 24)

குறிப்பு: அனைத்து வினாக்களுக்கும் விரிவான விடையளிக்கவும். 3 x 8 = 24

43. அ) உங்கள் இல்லத்துக்கு வந்த விருந்தினருக்கு நீங்கள் செய்த விருந்தோம்பலைப்பற்றி எழுதுக.

*(அல்லது)*

ஆ) "பன்முகக் கலைஞர்" என்ற சிறப்புப் பெயர் முத்தமிழறிஞருக்கு எவ்வளவு பொருத்தமுடையது? என்பதைப் பாடத்தின் வழி நிறுவுக.

44. அ) பாய்ச்சல் கதையைக் கருப்பொருள் குன்றாமல் சுருக்கி எழுதுக. *(அல்லது)*

ஆ) அன்னமய்யா என்னும் பெயருக்கும் அவரின் செயலுக்கும் உள்ள பொருத்தப்பாட்டினைக் கோபல்லபுரத்து மக்கள் கதைப்பகுதி கொண்டு விவரிக்க.

45. அ) "பெஞ்சல் புயல்" என்ற தலைப்பில் குறிப்புகளைக் கொண்டு கட்டுரை வரைக.
முன்னுரை - பெஞ்சல் புயல் - மழைப்பொழிவு - அதிக பாதிப்பிற்கான காரணங்கள் - பாதிக்கப்பட்ட மாவட்டங்கள் - விழிப்புணர்வு - நமது கடமைகள் - முடிவுரை *(அல்லது)*

ஆ) குறிப்புகளைக் கொண்டு கட்டுரை எழுதி தலைப்பிடுக.
முன்னுரை - 'சாலைப் பாதுகாப்பு உயிர் பாதுகாப்பு' - சாலை விதிகள் - ஊர்தி ஓட்டுநருக்கான நெறிகள் - 'விபத்தினைத் தவிர்ப்போம் விழிப்புணர்வு தருவோம்' - முடிவுரை.

★★★★★★

Kindly Send Me Your Key Answer to Our email id - Padasalai.net@gmail.com

# தன்விவரப் பட்டியல்

1. பெயர் :
2. பாலினம் :
3. பிறந்த நாள் மற்றும் வயது :
4. தேசிய இனம் :
5. பெற்றோர் / பாதுகாவலர் பெயர் :
6. வீட்டு முகவரி :
7. தொலைபேசி / அலைபேசி எண் :
8. பத்தாம் வகுப்பில் பெற்ற மதிப்பெண்கள் :
9. தாய்மொழி :
10. பயின்ற மொழிகள் :
11. தட்டச்சு :
12. கணினி :

மேற்கண்ட விவரங்கள் அனைத்தும் உண்மையென உறுதி கூறுகிறேன், தங்கள் நிறுவனத்தில் ______________________________ பணியினைத் தந்தால் என் பணியைச் சிறப்பாகவும் உண்மையாகவும் செய்வேன் என உறுதியளிக்கிறேன்.

இப்படிக்கு,

தங்கள் உண்மையுள்ள

தேதி -

இடம் -

www.Padasalai.Net